முருகப்பெருமான் துணை

**மகான் கொங்கணேஸ்வரர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**25.01.2024,** வியாழக்கிழமை

1. அன்னதான ஞான பலமும் கூட்டி
அருட்கொடையாக மக்களிடை
அண்ணலாக அவதாரம் எடுத்து
அருளுகின்ற ஞான வள்ளலே
2. வள்ளலே உன் பெருமை கூறி
வழங்குவேன் துல்லிய ஆசி
சொல்லவே சோபகிருது கலை திங்கள்
சுருதிபட லாப திகதி வேந்தன் வாரம்
(சோபகிருது வருடம் தை மாதம் 11 ம் நாள், 25.01.2024, வியாழக்கிழமை)
3. வாரமதில் கொங்கணேஸ்வரர் யானும்
வழங்குவேன் உலக நலம்பெற
சோரமின்றி ஞானவாழ்வு தர
சுத்த சைவ நெறி காட்டும் அரங்கன்
4. அரங்கன் தர்ம வழிகள் தனை
அனைவரும் ஏற்று வருக
வரங்களாக அவரவர் வாழ்விலும்
வந்தடையும் மாற்றம் ஏற்றம்
5. ஏற்றமுடன் ஞான வாழ்வாக
எல்லோரும் சமம் என்கின்ற
மாற்றம் தரும் சமத்துவ நெறியை
மாதவசி வழங்கி வர
6. வருகவே உலகமக்கள் ஏற்று
வகுப்பு வாத இன பேதமின்றி
தருமமோடு ஒற்றுமை கொண்டு வர
தலைவனாக தவசி அரங்கனை ஏற்று

7. ஏற்றுமே ஞானிகள் பூசைதனை
இடைவிடா நாளும் செய்துமே
பற்றுகொண்டு தன்னார்வத் தொண்டர்களாக
பாடிடுவேன் சேவை ஆற்றிவர

8. வருகவே தரும சக்தியானது
வையகம் எங்கும் பெருகி
தருமவான்களாக நிறைந்த நல்
தரணியாக உலகம் மாறும்

9. மாறுதலை கண்டடைய உலகில்
மக்களெல்லாம் ஞானிகளாக
ஆறுமுகப் பெருமான் ஆசியும்
அனுகூலம் பெற்ற மக்களாக

10. மக்களாகவே ஆற்றல் பெருகி
மாதவசி அரங்கன் வழிகாட்டலில்
ஆக்கமுடன் உலகம் தன்னை
அறம் நிறைந்த ஆளுமையாக

11. ஆகவே ஞானத்தலைமை உருவாக
ஆன்மீக ஞான ஆட்சி காலமாக
வகைபட அரங்கன் அவதாரத்தால்
வருங்காலம் மாற்றம் காணும்

துல்லிய ஆசி முற்றே

–சுபம்–